



# அந்த நாட்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# க.சி.கிருஷ்ணசாமி

அவர்களின்

ஓராண்டு நிறைவின்

# அந்த நாட்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம் (திருத்தாண்டகம்)**

நில்லாத நீர்சடைமே னிற்பித் தானை
நினையா வென்னெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனவெல்லாங் கற்பித்தானை
காணாதனவெல்லாம் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாஞ் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லா தவென் னோய் தீர்த்த புனிதன் றன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டே னானே.

**திருவாசகம்**

சுந்தரத் தின்பக் குயிலே சூழ்கடல் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழித்திங் கடியவர் ஆசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவுமாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவக னைவரக் கூவாய்

**திருவிசைப்பா**

தனதனற் றோழா சங்கராசூல
பாணியே தாணுவே சிவனே
கனக நற்றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
அனகனே குமரவிநாயக சனக
வம்பலத் தமரர் சேகரனே
நுனகழலிணையென் னெஞ்சினு ளினிதாய்த்
தொண்டனேன் நுகருமா நுகரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார்வந் தாரமரர் குழாத்தி லணியுடையா திரைநாள்
நாராயணனொடு நான் முகனங்கி யிரவியு மிந்திரனும்
தேரார்வீதி யிற்றேவர் குழாங்க டிசையனைத்து நிறைந்து
பாரார் தொல் புகழ்பாடியு மாடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
என்றைக்கும் திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

## திருப்புகழ்

கருவினுரு வாகிவந்து வயதினிலே வளர்ந்து
கலைகள் பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்கு ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி
அரகரசி வாயவென்று தினமுநினை யாமல்நின்று
அறுசமய நீதியொன்றும் அறியாமல்
அசனமிடு வார்கின்தங்கள் மனைகள்தலை வாசல்நின்று
அனுதினமு நாணமின்றி அழிவேனோ
உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மானரங்கள்
உலகளவு மால்மகிழ்ந்த குமரேசா
உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனருளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரரிடம் தீரவென்று
பழனிமலை மீதமர்ந்த பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பக்கத் திலிருந்து பாட்டுக்கள் பல பாடினீர்

இச்சகத்தினில் வாழ வகையெல்லாம் தான் அளித்தீர்

திக்கற்று. தென்மராட்சியும் கலங்கி ஒதுங்க நீர்

துக்கித்து. துடியாமல் பதறாமல் சிதறாமல் சிரித்தீர்

பக்கென்று வந்தான் அந்தச் சதிகாரன் ஷெல் வடிவில்

டக்கென்று நீரும் சேர்ந்தே போய்விட்டீர்

விக்கித்தும் துக்கித்தும் வேதனையில் வேல் பாய்ச்சியும் நாம்

சொர்க்கத்தில் உமைச் சேர்த்தோம் தூயவனே காணிக்கை



மருதம் பதிப்பகம். நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மலர்வு | | விரைவு |
|---|---|---|
| 08 |  | 09 |
| - | | - |
| 10 | | 06 |
| - | | - |
| 1942 | | 2000 |

## அமரர்
# கந்தர் சின்னப்பு - கிருஷ்ணசாமி

(ஓய்வு பெற்ற தபாலதிபர்,
பகுதிநேர ஆங்கில ஆசிரியர்,
அயோத்தி தொலைத்தொடர்பக உரிமையாளர்)

### திதி வெண்பா

ஈரா யிரமாண்டு வைகாசி பூர்வபக்கம்
பேராத் திதிஅட் டமிவெள்ளி - ஊரார்
விரும்பும் கிருஷ்ண சாமிஇறை தானடைந்தார்
பெரும்பித் துலகுகொள நீத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அமரத்துவமடைந்த க.சி.கிருஷ்ணசாமி அவர்கள் மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தர் சின்னப்புவுக்கும் கந்தர் வள்ளிப்பிள்ளைக்கும் 08.10.1942 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தமது ஆரம்பக்கல்வியை மீசாலை விக்னேஸ்வராக் கல்லூரியில் பயின்றுபின் உயர் வகுப்புகளை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பயின்றார் அப்பொழுது சமஸ்கிருதமும் ஒருபாடமாக பயின்றார் அதன்பின் லண்டன் G.C.E. பரீட்சையில் சித்தி பெற்றார். 1962ம் ஆண்டு உதவி தபால் அதிபராக பதவி ஏற்றார். 1990ம் ஆண்டு வரை உதவிதபால் அதிபராக கடமை ஆற்றினார். அதன்பின் 1992இல் இருந்து மீசாலை வீரசிங்க வித்தியாலயத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக கடமையாற்றினார். அதோடு நின்று விடவில்லை ஆயகலைகள் அறுபத்து நான்கு என்று பேசுவார்கள் அதிலே சில கலைகளைக் கற்கின்ற ஆர்வமுள்ளவராக இருந்தார். பிரவேச பண்டிதர் வகுப்பிலே விசேடசித்தி அடைந்தார் பால பண்டிதர், வகுப்பினையும் படித்தவர் அதோடு கணணிப்பயிற்சியும் பயின்றார். நாடகமும் அரங்கியலும் என்றபாடம் கற்று ஆசிரிய தரச் சித்தியும் பெற்றார். பெற்றதுமட்டுமல்ல பல நாடகங்களை ஆக்கம் செய்து தாமும் அதிலே பாத்திரம் ஏற்று நடிப்பார். அதிலேயும் அவருடைய நடிப்பிலே இருக்கின்ற திறன் என்னவென்றால் அவரும் அவரின் வாழ்க்கை துணைவியும் பங்கேற்று நடிப்பார்கள் அது இன்றும் எம்முடைய நினைவிலே நிற்கின்றது.

உலகமே ஒருநாடக மேடை அதிலே நாம் பிறந்து பலநாடகங்களை நடிக்கின்றோம் நாடகம் முடிந்த உடனே அந்த வேடம் களையப்படுகின்றது நாம் வேறு ஒருவர் ஆகின்றோம். இது இயற்கையின் நியதி இதை நிஜமாக நாடகமாக குடும்பமாக நடித்துக்காட்டி உண்மையின் தத்துவத்தைக் காட்டியவர்தான் அன்பன் கிருஷ்ணசாமி அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிப்பு மட்டுமல்லாது திருமுறை ஓதுவதிலேயும் சிறந்தவராக விளங்கினார். ஆலயதிருமுறை முற்றோதல் திருவாசக முற்றோதல் அந்தியக் கிரிகைகளின் போதும் திருமுறை ஓதுவார். என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறு என்று திருமூலர் கூற்றுக்கிசைய வாழ்ந்த பெரியார் ஆவார்.

இவரின் வாழ்வில் விதி விளையாடுகின்றது. இவ் வாழ்வின் வினைப்பயன் முடிகின்றது (வினைப்பயன் முடிந்தால் தினைப் பொழுதும் தரியாது இந்த ஆன்மா) அந்த வகையிலே ௨000ம் ஆண்டு வைகாசி மாதம் பூர்வபக்ஷ அஷ்டமித்திதியிலே இவருடைய ஆன்மா இவ்வுடலை விட்டு நீங்கிவிட்டது.

திருவாளர் கிருஷ்ணசாமியின் ஆன்மா நல்ல கதியிலே சாந்தி அடைய எல்லாம்வல்ல அம்மை அப்பனுடைய பாதங்களைப் பணிவோமாக!

**சிவஸ்ரீ.இ.குமாரசாமிக்குருக்கள்,**
**சுட்டிபுரம் அம்மன் தேவஸ்தானம்,**
**வரணி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் படைத்தாய்

வான் படைத்தாய் மண் படைத்தாய் மன்னுயிர்கள் படைத்தாய்
ஏன் படைத்தாய் இங்கு ஓர்நாள் கலங்கி அழவா?

தேன் படைத்தாய் திறன் படைத்தாய் தெளிவே இல்லா
ஊன் படைத்தாய் உறவென்று பலபேர் படைத்தாய்
கோன் படைத்தாய் குறையில்லாது நாடுகள் வாழ
தான் படைத்தாய் தாளிணையைச் சார்ந்து சேர
ஏன் படைத்தாய் இங்கு ஓர்நாள் கலங்கி அழவா?

## ஏன் கவர்ந்தனை எனக்கதைக் கூறு

தபாலதிபராய் தலையாய சேவையும்
தயாள குணமும் நேர்மை நிலையும்
கலைகளின் தெளிவு கட்டுரைவின்மை
ஆங்கில மொழியில் அளவிலா ஞானம்
நாடக நெறியில் நிறைந்த புலமை
விருந்தினர் மகிழ்வுற அகமகிழ் சேவை
இவையெல்லாம் கண்டு இறும்பூ தெய்தினேன்
காலனே!
உனக்கேன் பொறாமை உள்ளதைச் சொல்லு
என்னுயிரான கிருஷ்ணசாமியை
ஏன் கவர்ந்தனை எனக்கதைக் கூறு

**கந்தமுருகேசதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் உருகும் உணர்வலைகள்

நெருநல் உளனொருவனின்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்வுலகு

அமரர் சின்னப்பு கிருஷ்ணசாமி அவர்கள் எமது நெருங்கிய உறவினர். இவர் சின்னப்பு வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் கடைசிப்பிள்ளை ஆவார். இவருக்கு நல்ல தம்பி, தாமோதரம்பிள்ளை என்னும் அண்ணன்மாரும், தங்கம்மா, நல்லம்மா, செல்லம்மா ஆகிய அக்காமாரும் உள். இவர் தாய் வயிற்றில் இருக்கும் போது தந்தையை இழந்துள்ளார். குடும்பக் கஷ்ட நிலையிலும் செல்லமாக வளர்க்கப்பட்டு ஆரம்பக்கல்வியை மேற்கொண்டார்.

இளமை தொடக்கம் கல்வியைச் சிறப்புறக் கற்று சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். க.பொ.த. சாதாரண பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று ஆசிரியர்களது நன்மதிப்பைப் பெற்றார். மற்றவர்க்குச் சிரமம் கொடாது தான் உழைக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டானது.

1962ம் ஆண்டு தனது இருபதாவது வயதில் தபாற் திணைக்களத்தில் உதவித் தபால் அதிபராக வேலை கிடைத்தது. இலங்கையின் பலபாகங்களிலும் சேவையாற்றினார். மும்மொழிகளிலும் சிறந்த ஆற்றலுடையவராகத் திகழ்ந்தார். மக்களதும் மேலதிகாரிகளினதும் நன்மதிப்பைப் பெற்றார் சமஸ்கிருதத்தையும் கற்றுத் தேறினார்.

1973ம் ஆண்டு மீசாலையைச் சேர்ந்த கிருஷ்ணசாமி தங்கம்மா தம்பதிகளின் இளைய புதல்வி தெய்வநாயகி என்பவரை வாழ்க்கைத் துணையாக வாய்க்கப் பெற்றார். இல்லறத்தை நல்லறமாக நடாத்தி திலீபன், திவ்வியன், சியாமளன் என்னும் நன்மக்களைப் பெற்று மகிழ்ந்தார். இரண்டாவதுமகன் பிறந்து சிறிது காலத்தில் துணைவியாருக்கு இசையாசிரியைப் பதவி கிடைத்தது.

''தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தியிருப்பச் செயல்'' என்னும் வள்ளுவர் வாக்கிற்கமைய மைந்தர் கல்விச் சிறப்புக் கண்டு மகிழ்ந்தவர்.

மூத்தமகன் திலீபன் சுவிஸ்நாட்டில் வேலை பார்ப்பவர். திவ்யன் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் மூன்றாம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனாகவும், சியாமளன் யாழ் பல்கலைக்கழகம் கலைப்பிரிவிலும் கற்றுக் கொண்டிருக்கின்றனர். மூத்தமகன் திலீபன் பிரேமினி விவாகம் சுவிஸ் நாட்டில் நடைபெற்றாலும் அன்றையதினம், ஆலய வழிபாடு, அபிடேகங்கள் செய்து வீட்டில் கொண்டாடி ஆனந்தம் கொண்டனர்.

அமரர் கிருஷ்ணசாமி அவர்கள் குடும்பநலன் கருதி 1990ம் ஆண்டு தனது வேலையிலிருந்து சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெற்றார். தனது நேரத்தை வீணாக்கவில்லை. ''பாடை ஏறினும் ஏடது கைவிடேல்'' என்னும் முதுமொழிக்கிணங்க பல துறைகளிலும் படித்துக் கொண்டேயிருந்தார். ஆங்கில பகுதிநேர ஆசிரியராக வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் கற்பித்துக் ரொண்டிருந்தார். ஆங்கிலம் கற்பித்தலோடு நிற்கவில்லை. மாணவரை நாடகத்துறையில் ஈடுபடச்செய்து, சிறந்த முறையில் கலையை வளர்த்து ஆங்கில, தமிழ் நாடகங்களை அரங்கேற்றியும், ஆலயங்கள், விழாக்களில் பங்குபற்றியும் மகிழ்ச்சியடைந்தார். அதுமாத்திரமல்ல இசைத்துறையிலும், ஆத்மீகத்திலும் நாட்டங்கொண்டு ஆலயங்களில் பிரார்த்தனை செய்தல் மரணவீடுகளில் தேவாரம், சுண்ணப்பாட்டு பாடுதல், முதலிய கைக்கரியங்களைச் செய்யத்தவறுவதில்லை. இதனால் மாணவர், ஆசிரியர், ஊரார் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றவர். பிரவேச பண்டிதை பரீட்சையில் சித்திபெற்றவர். நாடகத்துறையில் ஆசிரிய தராதரப்பத்திரம் பெற்றவர்.

தொலைத் தொடர்பகம் அமைக்க ஆசைகொண்டு, ''அயோத்தி'' என்னும் பெயரில் தொலைத் தொடர்பகத்தை மீசாலை பழைய தபாற் கந்தோருக்கு அருகாமையில் அமைத்து ஆசையை நிறைவு செய்தார். மகன், மருமகள், பெறாமக்கள், மருமக்கள் என்பவருடனும் நன்றாகக் கதைத்து மகிழ்ந்தார்.

இவற்றோடு நிற்கவில்லை. தோட்டச்செய்கையிலும் ஆர்வங் கொண்டு தனது சொந்தத் தோட்டத்தில் எலுமிச்சை, தோடை, மாதுளை, பப்பாசி, வாழை, இலைக்கறிவகை, மூலிகைகள் முதலியவற்றைப் பயிரிட்டு ஆனந்தமடைந்தார்.

இவர் உற்றார், உறவினர், நண்பர்கள், மாத்திரமல்ல பெருமை சிறுமையின்றி, யாவர்க்கும் உரிய நேரத்தில் உதவும் பண்பாளர். நாட்டுச் சீரகேடு காரணமாக மக்கள் இடம்பெயரும் நோக்கில் ஆயத்தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்டிருக்கையில், மனைவி, மக்கள், உற்றார், உறவினர், ஊரார் யாவரும் அதிர்ச்சியுறும் வகையில் மின்வேகத்தில் அமரத்துவம் அடைந்துள்ளார். வாழ்க்கை என்பது ஒரு நாடகமேடை என்பதை நிரூபித்துவிட்டார்.

ஆண்டவன் தொண்டு வீண்போகவில்லை. "அப்பனே உனக்கு அகதி அந்தஸ்து வேண்டாம். அலைந்து அல்லலுற வேண்டாம். நீ சொந்த மண்ணிலே சாம்பராகி எம்முடன் வா" என ஆண்டவன் அழைத்தார் போலும். அவர் ஆத்மா சாந்தியுறப் பிரார்த்திப்பதோடு அவர் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அண்ணன்**
**பெ.மார்க்கண்டு**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்று போகவில்லை ஐயா உமது நினைவு

கம்பன் கண்ட அயோத்தியிலே புகழ்மிக்க
தசரத இராமனை அன்று கண்டான்
நாம் கண்ட அயோத்தியிலே மீசாலை
கிட்டு என்ற சித்தப்பாவையே கண்டோம்.

துடிப்பான மீசையைத் தடவிக் கொடுத்து
எடுப்பான உரையை மிடுக்காக கூறி
நடப்பாக நடந்த கிட்டு சித்தப்பா
கிடைப்பாரா எமக்கு எங்கு காண்போம்

கண்டதும் கனிவுடன் கதைப்பீர
கலையில் உள்ள நாட்டத்தை கேட்பீர
ஆங்கிலத்தில் கதைக்க வாரீர என்பீர
ஆள் நடமாட்டம் இல்லாமல் போனீர

பாட்டும் பயனும் சொல்ல பக்கமெல்லாம் செல்வீர
பக்கம் பார்க்கவும் நாம் அருகில் இல்லை
தமிழனாய்ப் பிறந்த தலைவிதி தானோ
தரையிலே நடத்தல் அரைகுறை தானோ

மயில்வாகன அண்ணரின் கிரிகை செய்ய
கீரிமலை செல்ல உரிமையுடன் வந்தீர
பரிவுடன் பிள்ளைகள் பசியென்று கேட்க
பாலுடன் வந்த காட்சி மாறு முன்

காலனுக்கு ஏனோ அவசர புத்தி
சாத்திரம் பார்த்தா தரையிறங்கி வந்தான்
தமிழனாய் பிறந்த பலன் போதும் அவனுக்கு
தலைவிதி என்று ஆறுதல் கொள்வோம்.

அற்றுபோக வில்லை ஐயா உமது நினைவு
பற்று வைத்த உமது பாசம் பெரிது
சற்றும் நீர விலகவில்லை என்பதே உணர்வு
முற்றும் மனத்தால் துதிப்போம் துதிப்போம்

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

**வையன்னா**
**குடும்பம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.சிவசம்பு
இரதி வாசம்
மீசாலை கிழக்கு
மீசாலை.

## உத்தம நண்பனே

இருவரது அக்காமாரின் இணைப்பால் உயிர் நண்பர்களானோமே. சிறுபிராயத்தில் ஒன்றாகப் படித்தோம். தோட்டம், திருவிழா. படம், கல்யாணம், கூட்டம் எங்கு போனாலும் சேர்ந்து கொண்டோமே. ஒருவர் நின்றோமென்றால் மற்றவரும் அங்குதான் என்று தேடிப் பிடித்து விடுவார்களே அண்ணன் மாரும் அக்காமாரும்.

விக்கினேஸ்வராவில் இரவுப்படிப்பு மாத்தறாய் மதவில் இருந்து வச்சிரவேல் கடையின் பாணும் வடையும் எல்லாம் நினைவிருக்காடா? எப்படியடா நீ மறப்பாய்.

நீ உதவி தபால் அதிபராகி பூநகரிக்கு சென்றாய் நான் தொழில் நுட்பக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன் பூநகரிக்கு வா என்று சொல்லி ஐயர் வீட்டுச் சாப்பாட்டைப் பகிர்ந்தாயே இன்னும் இனிக்குதடா...... உன்தாய் வள்ளி ஆச்சி அடுப்படிக்குள் இருத்தி எண்ணெய் விட்டு சுட்டுத்தரும் தோசை....... மறக்க முடியுமா?

இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தில் உதவி தொழில் நுட்ப உத்தியோகத்தனாகச் சென்றேனே. அங்கு தானும் விட்டியாடா தேடி வந்து விட்டாயே.

விடுமுறைக் காலங்களில் ஒருவருக்கொருவர் சொல்லாமல் ஊரில் சந்திப்போம். அக்காமார் "சொல்லிப் பேசியா சினேகிதர் வந்திருக்கிறியள் என்பார்களே.

உன் அக்கா சொன்னது வா என்று கல்யாணத்துக்கு பொம்பிளை காட்ட அழைத்துச் சென்று தேசிக்காய் தண்ணீர் வாங்கித் தந்தாயே.

நீ கல்கமுவில் வேலைசெய்து கொண்டிருக்கையில் நான் அங்கு வருகிறேன் உன் அன்புமனையாளும் நீயுமாகப் போட்ட சாப்பாடு..மறக்குமாடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதனையடா மறப்பது எப்படியடா மறப்பது...தொழிலில் நேரத்துடன் ஓய்வு பெற்றாயே எம்மூர் பள்ளி மாணவர்க்காய் நேரத்தைக் கழித்தாயே. இறுதிக் காலத்தில் தொலைத் தொடர்பு நிலையம் அமைத்தாயே நான் தரும் செய்தி எல்லாம் என்அன்பு மனையாள் றாதாவுக்குச் சொல்லி வருவாயே.........

எதனை மறப்பேன் எப்படி மறப்பேன். இறுதியில் தூரத்தில் இருக்கும் எனக்கு ஒரு கடைசிவார்த்தை சொல்ல முடியாது போனாலும். உன் அன்பு மனையாளுக்கோ பிள்ளைகட்கோ கூட பிரிவு பற்றி ஒருவார்த்தை கூறவில்லையே. ஏனடா?

I.B.C யில் உன்நாமம் உச்சரித்தபோது என்தலை வெடித்தது. நான்..............

உன் கடைசிக் கடன் செய்யத்தானும் என்னைக் கூப்பிட்டியாடா?

இந்த உலகில் யாரடா எனக்கு தஞ்சம். இல்லை இந்த உலகில் யாரடா எனக்கு நிந்தம்...யாருமே இல்லை யாருமே இல்லை ஆதலால் உன் அழைப்பை எதிர்பார்த்து விடைபெறுகின்றேன்.

''மரணம் என்பது ஜீவனைப் பொறுத்தவரையில் புதியசக்தியும் புது ஆற்றலும் உற்சாகமும் திறமையும் உயிரில் உருவாகும் ஒரு புனித நிகழ்வு.''

என்பதால் அனைவரும் அமைதியடைவோமாக

**இறை இணைப்பின் பிரிவால் வாடித் தவிக்கும்**
**உற்ற உயிர் நண்பன்**
**சம்பு (நுவறட்டணம்)**

முற்றும் உணர்ந்தவனை, தொல்லோனை, அனைத்தையும் ஆளுபவனை அணுவுக்கும் நுண்மையான அனைத்தையும் தாங்குபவனை சிந்தனைக்கு எட்டாத வடிவுடையவனை கதிரவனைப் போன்று ஒளிர்பவனை அஞ்ஞான இருளுக்கு அப்பாற்பட்டவனை பக்தியோடும் உறுதியான மனத்தோடும் யோகபலத்தோடும் புருவ மத்தியில் பிராணன் முழுவதையும் வைத்து மரண காலத்தில் யார் நினைக்கிறானோ அவன் அத்திவ்விய பரமபுருஷனை அடைகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம் பெயர்ந்து போனாலும் புதையவில்லை உம்நினைவு

சிறப்போடு பலர்வாழும் மீசாலைப் பதியில்
சின்னப்பு வள்ளிப்பிள்ளையின் கடைசி மகனாய்
அன்னையின் அரவணைப்பின் வளர்ந்த சித்தப்பாவே
சாவகச்சேரி இந்துவில் கல்வியே செல்வமென
நிகரற்ற கல்விபெற்று அதன் பயனாய்
அஞ்சல் அதிபராகி அன்னையின் புகழ் பரப்பினீர்
தெய்வ நாயகியைக் கைப்பிடித்து மூவர் மக்களுடன்
"நல்ல தொரு குடும்பம் பல்கலைக் கழகமென"
நாளும் பொழுதும் கண்டு களிப்புற்றோமே
களங்கமற்ற உம் உள்ளம் எம்கருணைத் தெய்வம்
எம்மோடு காட்டிய பாசம் நேசம் என்றுமே மறையாது
கடமையெல்லாம் கண்ணியமாய் ஆற்றுவீரே
கருணையே உருவான எங்கள் கிட்டுச் சித்தப்பா
கனிவான உம் வார்த்தைகள் கதைகள் சொல்லும்
தருணமறிந்து எமக்கு ஈயும் பண்பு
தரணியிலே யாம் மறப்போமா?
பெருங்குணங்கள் நிறைந்த எம் கிட்டுச் சித்தப்பாவே
அருங்குணங்கள் அன்பு நெறி எல்லாம் சேர்ந்து
மக்களை மனைவியை எம்மை எல்லாம் தவிக்க விட்டு
காலத்தின் கோலத்தில் காலன் அவன் கையில்
கருகிய மலராய் காற்றோடு கலந்த தென்ன?
"கனவிலும் தீங்கு எண்ணாத நீர் கடவுளுடன் வாழ்வீரே
"புலம்பெயர்ந்து போனாலும் புதையவில்லை உம் நினைவு"
என்றும் எம்மோடு உம் நினைவுகள் ஜீவிக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
கங்காணியார் முருகன் பாதமலர் சூடுகின்றேன்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**திரு.ம.பாலசச்சிதானந்தேஸ்வரன்**
**குடும்பம் (ரவி)**
**மீசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் நியதி

மாவும் பலாவும் தென்னையுமாய் நிறைந்த மீசாலையிலே தனக்கென ஓர் ஒப்புயர்வில்லாத இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தவர் அமரர் க.சி.கிருஷ்ணசாமி அவர்கள்.

எல்லோருடன் அன்பாகப் பழகி தனக்கெனத் தனி இடம் பிடித்துக் கொள்ளும் சாதுர்யம் அவருக்கே உரித்தான பண்பு.

அஞ்சல் அதிபராகி இசையின் ஈடுபாட்டினாலும் இசை ஆசிரியையே துணையாக்கி வாழ்ந்த வாழ்வு நிகழ்வுகள் மறக்கமுடியாதவை.

இளவயதிலேயே ஓய்வுபெற்றும் தம் சேவையை யா/மீசாலை வீரசிங்கத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகி பணி புரிந்தமையும் எம்மூர் செய்த பாக்கியம்.

ஆசிரியர் என்ற பதத்திற்கு அரிய விளக்கமாய் வாழ்ந்து காட்டிய இவரின் அறிவின் ஆழம், அன்பின் ஆழம், பண்பு யாவர்க்குமே எடுத்துக்காட்டாக விளங்கும்.

அழகிய முறுவல் தவழும் முகம் பணிவு என்னும் அணி மொழி வீசப் பாமரரும் பாவலரும் போற்ற வாழ்ந்த வாழ்வு மறக்கக் கூடியதே அல்ல.

பிள்ளைகளின் மகிழ்விற்காக தனது கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் முன்பே தம் இனிய மனையாளிடம் தம் கடமைகளை ஒப்படைத்து விட்டு இறைவன் நிழலில் ஆறுதல் அடையச் சென்று விட்டமை மனத்தை நெகிழச் செய்கிறது.

"எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லும் அழுதுதொழுது நின்றாலும் அதில் ஓர் எழுத்தும் மாறாதே.

இந்த இயற்கையின் நியதியை யாரால் எப்படி மாற்ற முடியும். எனவே அவரின் ஆன்மா சாந்தியடைய வேண்டிநிற்பதோடு துயருற்றிருக்கும் அமரர் குடும்பத்தாரும் மனச்சாந்தி பெறவும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி!

**திரு.திருமதி புஸ்பலீலாவதி**
**பொன்னம்பலநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாத அலையாகி ........

அன்னை வயிற்றில் நீர ஒன்பதாம் திங்கள் அது
உம் தந்தை உனைப் பிரிந்தார்
மீசாலைப் பதியிலே நீர பிறந்தீர. ஆனாலும்
தந்தைமுகம் பார்த்ததில்லை
அன்னையின் அன்பான அரவணைப்பு, பாசம் இவற்றில் வளர்ந்தீர
சின்ன வயதிலேயே கல்வியில் சிறந்தீர
அன்பொடு அறிவும் பண்பும் பெற்றீர
சாவ இந்துவில் கற்பன கற்று சான்றோனாகினீர
தபால் அதிபராகி கடமையைக் கண்ணியமாய் செய்தீர
களங்கமற்ற உம் அன்பால் உமக்கேற்ற துணைவியாய்
தெய்வநாயகியைக் காதலித்து கைப்பிடித்தீர்
மும்மூர்த்திகளை ஒத்த புத்திரர்க்குத் தந்தையானீர
நாட்டின் சீரகேட்டால் நேரத்துடன் ஓய்வு பெற்றீர
பகுதிநேர ஆங்கில ஆசானாகினீர
பெற்ற அன்னையும் பிரிந்து சென்றார் நீரோ
நாட்டிலோ குழப்பம் ஆனாலும்
"அயோத்தி தொடர்பகம் அமைத்து சேவை செய்தீர
உம் பிள்ளையென ஒருமகளை இருத்தி இன்புற்றிருந்தீரே.
உற்றோர் அற்றோர்க் கெல்லாம் உற்றுளி உதவியும்
உறு பொருள் கொடுத்தும் நற்றுணை செய்தீரே
காலன் அவனுடைய கோலம் ஷெல் உருவில்
உம் உயிரைக் கவர்ந்து சென்றான்.
செயதி கேட்டுத் துடித்தோம் துவண்டோம் வேறேது செய்வோம்
இறுதியிலும் உம்முகத்தையேனும் பார்க்க முடியவில்லையே
பரிதவித்துத் தவிதவித்து நிற்கின்றோமே
தம்பி நீ "அக்கா" என அழைத்தால் இன்னொருகால் அழையாயோ?
என அப்போதெல்லாம் நினைத்திருப்பேனே
உன் சிரித்தமுகமும் எடுப்பான மீசையும் எப்படியடா மறப்பேன்
ஓராண்டென்ன ஓராயிரம் ஆனாலும் "ஓயாத அலையாகி........
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார்வருவதில்லை"
நாமும் ஓர்நாள் இறப்பது திண்ணம் எனவே
உன் ஆத்மா சாந்தியடைய மாவடி விநாயகன் பாதம் பணிகின்றேன்.

**சகோதரி**
**பெ.கற்பகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சி.கிருஸ்ணசாமியின் அகால மரணம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் என்பது தமிழ்மறை

இவ்வுலகில் தோன்றிப் புகழுடன் வாழ்ந்தவர் அமரர் கிருஸ்ணசாமி. எவர்க்கும் இன்னா செய்யாமையே தமது குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர். எவருடனும் பகைமை பாராட்டது எல்லோர்க்கும் நல்லனவே செய்த அவர் வானுறையுந் தெய்வமானார் என்பது வியப்புக்குரியதல்ல. தபாலதிபராக இருந்து மக்களுடன் இன்முகம் காட்டி இனிய பணிபூண்ட அவர், பகுதிநேர ஆங்கில ஆசிரியராகவும் பணிபுரிந்து ஆங்கிலக் கல்வியில் பலர் முன்னேற வழி சமைத்தவர். இத்தகைய அன்பரைக் காலன் எறிகணை வடிவில் வந்து உயிர்களைந்து அவருடன் தொடர்புடைய அனைவரையும் ஆழ்ந்த கவலைக்குள்ளாகியிருப்பதில் அதிசயமில்லை.

இவரது தந்தையாரான கந்தர் சின்னப்பு இறந்து 31 நாட்களின் பின் அதாவது 08.10.1942 தோன்றிய கிருஷ்ணசாமி 09.06.2000 அன்று உயிர் நீத்தார். உற்றார், உறவினர், அயலவர் கதறியழ மீளாவுலகம் புக்க அவர் ஆத்மசாந்தி குறித்துப் பிரார்த்திப்பது தவிர வேறு யாது செய்வோம்.

ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவாரோ என்று வினாவினார் தமிழ் அன்னை ஔவை. விதித்த நாள் வந்துவிட்டால் மரணம் எப்படியும் வந்து சேருமென அறநூல்கள் பேசுகின்றன. அமரர் கிருஷ்ணசாமியின் மரணமும் அவ்வாறே. அவரது உடல் மறைந்தது உண்மைதான் ஆனால் ஆன்மா அழிவற்றது அவ்வான்மா என்றும் இறப்பதில்லையென்பது நூற்றுணிபு. அவர் தமக்கு இனியவர்களுக்குத் தோன்றாத் துணையாய் உதவி என்றென்றும் வாழ்வார் என்பதில் ஐயமில்லை.

திரு.கிருஷ்ணசாமி புலாலுடல் நீத்தாலும் புகழுடலுடன் எம் மத்தியில் வாழ்வராக. அவர் ஆத்மா சாந்தியடைய முக்கட் செல்வன் பாத கமலங்களைக் கைகூப்பி வாழ்த்தி வணங்குவோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

**திரு.சின்னப்பு நல்லதம்பி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாறாத் தொண்டாற்றி மீளாத் துயில் கொண்ட அடியவர்

நான் கொழும்பில் இருந்த சமயம் இளைப்பாறிய அஞ்சல் அதிபர் கே.எஸ்.கிருஷ்ணசாமி அவர்களது மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், ஆறாத்துயரும் கொண்டேன்.

அமரர் கிருஷ்ணசாமி அவர்களுடன் பல வருடங்கள் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இவரது இனிய சுபாவமும், சேவைமனப்பான்மையும், இறைபக்தியும் எனது நெஞ்சை விட்டகலாதவை.

சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள நாவலடிப் பிள்ளையார் கோவிலில் இவர் தமது பாரியாருடன் இணைந்து பஜனைகளையும், பிரார்த்தனைகளையும் நடாத்தி, சமய வளர்ச்சிக்கும், ஆலய முன்னேற்றத்திற்கும் ஆற்றிய தொண்டுகள் பல. கோவில் பணியென்றால், எவ்வளவு முக்கியமான தனது சொந்தக் கருமங்கள் இருந்தாலும் அதனைப் பின்தள்ளி, கோயில் பணிக்கு முதன்மை கொடுப்பார் அமரர் கிருஷ்ணசாமி அவர்கள்.

நேர்மையான, உண்மையுள்ளம் படைத்த இவரது மறைவு அவரது குடும்பத்தாருக்கு மட்டுமன்றி, நாவலடிப் பிள்ளையார் கோவிலுக்கு மட்டுமன்றி, ஏனைய சமய நிறுவனங்களுக்கும் கூடப் பேரிழப்பாகும்.

இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், இவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சு. தர்மலிங்கம்**

**நாவலடிப் பிள்ளையார் கோவில் பரிபாலனசபைச் செயலாளரும்,**
**சாவகச்சேரி நகரசபையின் இளைப்பாறிய பிரதம லிகிதரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் வித்தகர்

அன்போடு அரவணைத்து அறிவுரைகள் கூறிநிதம் அனைவரையும் அகமிக மகிழ வைத்து அயோத்தியின் தலைவனாம் கிருஷ்ணசாமி அவர்கள் அமரர் ஆகிவிட்டார். எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றுவிட்டார்.

அமரர் அவர்கள் கலையுலகின் கலங்கரை விளக்கு. முத்தமிழ் வித்தகர். மும்மொழியிலும் புலமையுடைய அவர் சிறந்த சமூக சேவையாளர் கலைகளில் தான்மட்டுமல்ல மற்றையோரும் சிறப்புற வேண்டும் என்னும் பெருநோக்கினை உடையவர்.

நாடகம் சம்பந்தமான பல அறிவுரைகளை உதவிகளை எனக்கு நல்கியவர் எனது கிருஷ்ணகான மன்றத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர். மிகவும் நகைச்சுவையாகவே பேசி மகிழ்விப்பார். அவர்களுடன் அவர்கள் குடும்பத்தவருடன் பாடி நடிக்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது.

அமரர் அவர்களுடைய துணைவியார் இசையாசிரியை என்பதாலும் கலைக்கோயிலான அவர்கள் வீட்டிற்கு நான் பலமுறை சென்றிருக்கின்றேன். அங்கு சங்கீதம், நாடகம் எனும் இருதுறைகளிலும் பலவிடயங்கள் பற்றிக் கதைக்கவும், கற்பிக்கவும் சந்தேகம் தெளிவிக்கவும் சந்தர்ப்பங்கள் கிட்டின.

அன்பான வரவேற்பு, உணவுண்டிகளுடனான உபசரிப்பு மறக்கமுடியாதது. தன் துணைவியார் சகிதம் எப்போதும் இன்முகத்துடன் சொல்லித்தருவார்களே.

கள்ளமிலா வெள்ளையுள்ளம் கொண்ட அவர் எப்போதும் கலகலப்பாய் இருப்பாரே.

அவரின் சிறப்பும் பெருகிட.....
எல்லோரும் கல்விமான்களாகிட.......
கண்பட்டதுவோ?.....

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முத்தமிழிலும் வித்தகரை இழந்து நிற்கின்றோமே....
அமருடைய ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல முருகன் அருள்வேண்டி நிற்கும்

**கிருஷ்ணபரமேஸ்வரன்,**
**கிருஷ்ணாபுரம்**
**கடுக்காயூர்**
**வரணி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாளும் வந்து சேரும்

சித்தப்பாவே
கொடும் பனியில் கொட்டும் மழையில் கடுங்குளிரில்
கண் விழித்திருந்த வயற்கரையின் அந்த நாட்கள்.....
எங்கள் ஊர்க்கு மின்சாரம் பெற்றிட ஓடிஅலைந்து
அவை கைகூடி மின்னொளி பாய்ச்சிய அந்த நாட்கள்....
ஊர் கோவிலில் திருவிழா என்றால் கூடிநின்று
பஜனை பாடிப் பரவசம் ஆகிய அந்த நாட்கள்.....
எத்தகையாரையும் உரிமையாய் அணுகி உற்றகுறைதீர்க்க
சற்றும் பின்னில்லாது தகுந்தவை செய்திட்ட அந்த நாட்கள்...
யாருக்கு வேண்டும் என்ன மொழியில் எழுத வேண்டும்
அவ்வகையெல்லாம் ஆவன செய்திட்ட அந்தநாட்கள்
வீட்டில் தோட்டத்தில் மூலிகை வளர்த்து உற்றநோய்க்கும்
அற்றார் பசிக்கும் ஔடதமாய் தந்த அந்த நாட்கள்...
எந்த விழாவிலும் முன்னின்றுழைத்து முதுகெலும்பாகி
துணைகொடுத்து ஆராமல் உதவிய அந்த நாட்கள்
பள்ளி மாணவரை வீட்டுக்கழைத்து நாடகம் பழகி
மேடையில் ஏற்யே மனத்தில் நிலைத்திட்ட அந்தநாட்கள்....
பசும் பாலை இனிதே தந்தும் இணைந்து இருந்தும்
எழில்கதை பகிர்ந்தும் படங்கள் பார்த்ததும் அந்த நாட்கள்.....
ஊரின் சுடலையை உருப்படியாக்க ஓடித்திரிந்து
உற்றவை செய்து சீர்திருத்திய அந்தநாட்கள்
வீட்டு வாங்கில் எல்லோரும் இருந்து முசுட்டை ஆய்ந்து
பிட்டு அவித்து ஆசையாய் தின்ற அந்த நாட்கள்........
ஓடிஓடி தொலைபேசித் தொடர்புகள் ஊரெங்கும் சொல்லி
உறவினை வளர்த்து உள்ளத்தை ஈர்ந்த அந்த நாட்கள்......
ஊரெங்கும் ஓடிட உறவுகள் பிரிந்திட மனம் குலைந்ததா?
பாரினை விட்டே பறந்தோடி விட்டதால் அந்த நினைவுகள்....
எம் வீட்டில் மட்டுமல்ல நம் நாட்டின் நரம்புகளாய்
அவையும் இன்னும் பேசும் அந்த நாளும் வந்து சேரும்.

மகள்
மாயதி தம்பிராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நெஞ்சில் ஓர் முள்

கடவுள் மனிதனாகப் பிறக்கவேண்டும். மனிதர்கள் அனுபவிக்கும் அத்தனை பெரிய துன்பங்கள், பிரிவுத்துயரங்கள் எல்லாவற்றையும் முழுமையாக கடவுளும் அனுபவித்துப்பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் மனிதர்களின் அவலத்தை அவரால் உணரமுடியும்.

சிறுவயதிலிருந்தே தானும் அமரர் கே.எஸ்.கேயும் ஒரே பாடசாலையில் கல்வி கற்றோம். பின்பு இருவரும் தபால் அதிபர் சேவையில் சேர்ந்து கடமையாற்றினோம். இச்சேவையிலிருந்து ஓய்வுபெற்றதும் நாம் இருவரும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றி வந்தோம். மேற்குறிப்பிட்ட ஒருங்கிணைப்பு செயல்பாடுகள் எமது தூய்மையான நட்புக்கு வலுச்சேர்த்தது.

அமரர் கே.எஸ்.கே மிகவும் எளிமையானவர். ஆடம்பரத்தை வெறுப்பவர். விடா முயற்சி உடையவர். உணவு முக்கியமல்ல கடமைதான் முக்கியம் என்றிருப்பார். அவர் ஒரு தலைசிறந்த கலைஞராவார். கலைக்காக உயிரையும் கொடுப்பேன் என்பார்.

இப்படிக் கலையுள்ளம் படைத்த அமரர் கே.எஸ்.கேக்கு ஒரு கலைச்செல்வி, சங்கீத ஆசிரியை மனைவியாக வாய்த்தார் என்பதை அறிந்து எமது கிராம மக்கள் ''என்ன பொருத்தம் இந்தப் பொருத்தம்'' என்று வாயாரப் புகழ்ந்து பாராட்டினார்கள்.

கணவனும் மனைவியும் சேர்ந்து எத்தனையோ மேடை நாடகங்களை தயாரித்து அதில் நடித்தும் மேடை ஏற்றினார்கள். அத்தனையும் மக்களின் அமோக பாராட்டுக்களைப் பெற்றிருந்தன. இவர்கள் தயாரித்த ஐந்து நாடகங்களில் பங்கு பற்றி நடிப்பதற்கு அடியேனுக்கும் சந்தர்ப்பம் கொடுத்து உதவினார்கள்.

அமரர் கே.எஸ்.கே எம்மைவிட்டு நிரந்தரமாகப் பிரியமுன்(இரண்டு மாதத்திற்குமுன்) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இவர்களால் தயாரிக்கப்பட்ட மேடையேற்றப்பட்ட ''தனிமரம்'' என்ற போட்டி நாடகத்தில் அடியேனும் பங்குபற்றும் பாக்கியம் கிடைத்தது. அந்த நாடகம் நடுவர்களின் பாராட்டைப் பெற்றதுமல்லாமல் அமரர் கே.எஸ்.கேயின் மனைவிக்கு சிறந்த நடிகைக்கான விருதும் வழங்கப்பட்டது. இதுதான் கே.எஸ்.கேயின் கடைசி நாடகம். இத்தோடு அவருடைய கலை வாழ்க்கை அஸ்தமித்து விட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அமரர் கே.எஸ்.கேயின் மரணவீட்டிற்கு சென்ற சமயம் அவரின் மனைவி ஓடோடி வந்து

''அண்ணா ! நாங்கள் நடித்த '' தனி மரம்'' நாடகத்தில் நடந்தது போல் என்னை தனிமரமாக விட்டுச் சென்று விட்டாரே'' என்று கண்ணீர வடிய கதறி அழுதார்.

இந்தச்சோக சம்பவம் இன்றும் என் மனதில் ஒரு முள்ளாகக் குத்திக்கொண்டே இருக்கிறது.

**வி.ரி.கனகரத்தினம்**
**ஓய்வுபெற்ற தபாலதிபர்.**
**மீசாலை.**



**துன்புறுத்தாத வாய்மையும் இனிமையும் நலமும் கூடிய வார்த்தை மற்றும் வேதம் ஓதுதல் இது வாக்கு மயமான தபசு என்று சொல்லப்படுகிறது. 17ஆம் அத்-15ஆம் சூத்திரம்**

**யாரிடத்திலிருந்தும் உயிர்கள் உற்பத்தியாயினவோ- யாரால் இவ்வையக மெல்லாம் வியாபிக்கப்பட்டுள்ளதோ அவ் ஈசுவரனை சுயகருமத்தால் வணங்கி மனிதன் மேன்மையெய்துகிறான்.**

**18 ~ 46**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணா!
# நீ அமரன்

நண்ப!
ஆங்கிலம் பயிற்றுவது
பகுதி நேரம் ஆனாலும்
மிகுதி நேரம் முழுதையுமே
பாடசாலை வளர்ச்சிக்காய்
அர்ப்பணித்த பெரியோய் நீ!
என்றும் வகுப்பறையில்
மலர்ந்த முகம்
மாணவர் நலந்தனிலே
பதிந்த மனம்
நண்ப!
நின் சேவைநலம் பாராட்ட
வார்த்தைவளம் எனக்கில்லை
கிருஷ்ணா!
நீ இசைப்பிரியன்
இசைமீட்க நீ பிறந்தாய்!
நீ நடிகன்
நடித்துவிட்டு நீ மறைந்தாய்!
கிருஷ்ணா!
நின் நாமத்தினுள்ளே
மறைந்திருக்கும்
நினது நிஜம் அழிவதில்லை
நீ நித்தன்!
நின் உள்ளத்தினுள்ளே
ஒளித்திருக்கும்
நினது உயிர் அழிவதில்லை
நீ அமரன்!

இதோ நின்
இறுதி வழிபாடு
நான் கண்டவாறு !..

செல்பட்டு இவ்வுடல்
சிதைந்திட நேரினும்
சிதறுண்டுபோய் மனம்
நிலை குலையாது
உறுதியாய் நின்தாள்
நிழலில் நிலைபெற
ஆக்குவாய் என்னை

**தா.இராமலிங்கம்**
ஓய்வுபெற்ற அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல் வீரன் செம்மனத்தோன்

இராமநாதன் கல்லூரியின் திறந்த வெளி அரங்கு நடுவில் உள்ள மைதானத்தை நோக்கியபடி அமர்ந்திருப்போம். இளங்காற்றும் மஞ்சள் வெயிலும் எம்மைத் தொட்டுச் செல்லும் நாடகமும் அரங்கக் கலைகளும் மாணவர்களுடன் நீங்கள் உங்கள் துணைவியார் சகிதம் இணைந்து கொள்வீர்கள். அப்போது உங்கள் கோலமும் பேச்சும், கவலைகள் அற்ற குதூகலச் சிரிப்பும் எம்மையெல்லாம் மகிழ்விக்கும் உங்கள் பேச்சின் தெளிவு எமது நெஞ்சைக் கொள்ளை கொள்ளும்.

உங்களிடம் எப்போதுமே தடல் புடல் காணமுடியாது. ஆனால் மகிழ்ச்சியூட்டும் அந்த மலர்ந்த முகம் பழகுவதற்கு இனியது.

எங்கள் வீட்டின் விறாந்தையில் நிலத்தில் இருந்து ஷேக்ஸ்பியர் படிப்போம். உங்களுக்குக் கால்மடித்து இருப்பது கஷ்டம். என்றாலும் பரவாயில்லை. என்று அமர்ந்திருப்பீர்கள். நீங்கள் கதிரையில் இருக்கலாம் என்று நான் சொன்னால் எல்லோரும் கீழே இருக்கும் போது நான் மட்டும் ஏன் அப்படி இருக்க வேண்டும் என்று கேட்டுப் பிடிவாதமாய் நிலத்தில் காலை மாறி மாறி மடித்து அமர்ந்திருப்பீரகள். உங்கள் ஆங்கில அறிவின் திறத்தினால் ஷேக்ஸ்பியரை நன்கு ரசிப்பீரகள். சிலசமயங்களில் எமக்கும் புதிய பார்வையைத் தருவீர்கள். அந்த நாட்கள் அற்புதமானவை!

மிக நன்றாகப் பாடுவீர்கள். தாளம் போடுவதில் சில சமயம் சிறு தவறு வந்து விடும். ''அவவிடம் ஏன் கேட்டுப் படிக்கவில்லை?'' என்று கேட்பேன். ஒரு சிரிப்பு வரும். அர்த்தமுள்ள அருமையான சிரிப்பு! அச் சிரிப்பை இனி எப்போது காண்போம்?

''மத்திய வயதிலும் ஒருவர் தொடர்ந்து படிக்கலாம் மத்திய வயதுள்ள மனைவி படிப்பதற்கு ஒருவர் துணையாக இருக்கலாம்'' என்ற கருத்துகளுக்கு நடைமுறை உதாரணமாய் இருந்த சான்றோன் நீங்கள். **செயல் வீரன் செம்மனத்தோன்**

நீங்கள்

''நவில் தொறும் நூல் நயம் போலும்
பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு''

என்ற குறளின் அர்த்தத்தை உங்கள் இருவரதும் உறவு மூலம் புரியவைத்தீரகள். இன்று நீங்கள் வான் புகுந்ததால் இந்த உலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுமையுற்றதாய் உணர்கிறோம்.

தென்மராட்சி மீது உங்களுக்கிருந்த பற்று அங்கு உங்களை வேர் பாய்ந்திருக்க வைத்தது. வலிகாமத்திற்கு வாருங்கள் என்ற எங்கள் பலரின் அழைப்பையும் மறுக்க வைத்தது. தென்மராட்சியில் நாடகத்தை முறையாகப் பயின்று சித்தி பெற்ற முதல் குடும்பம் என்ற பெருமையுடன், நீர் நிறையும் கண்களையும் கொடுத்து நிழலாக மறைந்து விட்டீர்கள். தவிக்கின்றோம்.

கடந்த வருடம் மார்ச் மாதத்தில் நாடக கலாவித்தகர் பட்டத்திற்கான நாடகங்கள் தயாரிப்பது பற்றி என்னுடன் கதைத்து ஆலோசனை பெறவந்தீர்கள், அப்போது தென்மராட்சியில் யுத்த சூழ்நிலை தோன்றியிருந்தது. ஒத்திகைகள் பார்ப்பதில் உள்ள சிரமங்கள்பற்றி எல்லாம் பேசினீர்கள். நீங்கள் இருவரும் இரு நாடகங்கள் செய்ய முனைந்து இரண்டையும் தரக் குறைவாய் முடிப்பதைவிட, யாராவது ஒருவர் செய்யுங்கள் இருவரது உழைப்பையும் அதில் காட்டுங்கள் கஷ்டமான நேரத்தில் அது போதும். மற்றவர் அடுத்த வருடம் செய்யலாம் என்று சொன்னேன். எனது ஆலோசனையை மந்திரம் போல் ஏற்று...

அவவுக்குத்தான் இது உதவும் நான் ஆறுதலாகவும் செய்யலாம். இவ்வருடம் அவ செய்யட்டும் என்று பெருமனதுடன் சொல்லி, உங்கள் மனைவியின் வெற்றிக்கு உழைத்தீர்கள். அடுத்த வருடம் மார்ச்மாதம் நீங்கள் இருக்கப்போவதில்லை. கலாவித்தகர் பட்டத்துக்கான நாடகம் தயாரிக்கப் போவதில்லை என அறிந்தோமா நாம்?

''எண்ணிய எண்ணியாங்கு எய்துவர். எண்ணியர்
திண்ணியாரகப் பெறின்''

என்பான் வள்ளுவன். திண்ணியரான நீங்கள் மனைவிக்குப் பட்டத்தை வாங்கிக் கொடுத்தீர்கள். அவரோ நாடகத்தில் வந்தது போலவே **தனிமரமானார்!**

''நல்ல நண்பரைக் கஷ்ட காலத்தில் தெரிந்துகொள்ளலாம்'' என்பார்கள். எனது பெற்றோரை நான் இழந்த போதில் உங்கள் உதவும் பண்பின் உன்னதத்தை உணர்ந்தேன்.

யாவுமே இன்று கனவாய் போயினும் நீங்கள் எப்போதுமே எம் உணர்வினில் வாழ்வீர். நீங்கள் உலாவிய மீசாலை மண்மீது உருளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கண்ணில் ஒற்றவும் சோலைக் குயில்கள் ஆசை கொள்கின்றன.

அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தலிலும் ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம். என்பதை உணர்ந்து, வாழ்வின் இறுதிப்பகுதியில் ஆங்கில ஆசிரியராய் ஆயிரம் மாணவருக்கு வழிகாட்டி தென்மராட்சிக்கு ஒளியூட்டி நின்ற ஐயனே!

மலை ஒன்று சரிந்து விட்டதா? மரம் வேருடன் சாய்ந்து விட்டதா? கடல் வற்றிக் காய்ந்து விட்டதா? கருங்கல் மனம் கூடக் கலங்குமே ஐயா!

தனி நடிப்பில் நீங்கள் காட்டிய தசரதர் பாத்திரம் மனதில் மங்கலாய் வருகிறது. அடுத்த ஆண்டு கலாவித்தகர் நாடகத்திற்குத் திட்டங்கள் போட்டுக்கொண்டிருந்த வேளை இன்று ஆறி ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிக்கிடக்கிறது. அறிவுச் சுடர் அன்பு விழிகள் மூடிவிட்டன.

கிருஷ்ணசாமித்தீபம் எமது உள்ளத்தில் ஒரு தனியிடம் கொண்டு சுடர்விட்டெரியும் நந்தா விளக்காகி விட்டது.

நீண்ட வாழ்வு நிறைந்த வாழ்வல்ல. நிறைந்த வாழ்வே நீண்ட வாழ்வு என எண்ணித் தேறுவோம்.

"நெருக லுளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத் திவ் வுலகு"

**கோகிலா மகேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புக்குரிய ஆசானே……

சோதனைகள் பல கடந்து
சாதனைகள் பல படைக்க
சான்றாயிருந்த
எம் அன்புக்குரிய
ஆசானே!
நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்ததிலிருந்து
எம் கண்ணீர் கரைகிறது!

எம் கலைகளை வளர்த்தெடுத்த
அன்புக்குரிய ஆசானே – உம்
சாந்த குணம்
அழுத்திக் கொண்ட
மாணாக்கரைத்தான் – இன்னும்
நெஞ்சுக் குழி நெகிழ்கிறது

பள்ளி காலங்களிலெல்லாம்
சோகச் சுவைகளின்
விலங்குகளை உடைத்து
காவியம் பாடி
கனவுகளில் உலாவர
சின்ன சின்ன தத்துவங்கள் பேசி
மகிழ்வித்தவரே!

இன்றைய
ஷெல்களின் சிதறல்களினால்
அன்னை மண்ணை விட்டு
அமைதி பெறச் சென்றீரோ!
எம்மால் நம்ப முடியவில்லை!
நீர கண்கள் கொண்ட மக்கள் நெஞ்சம்
நெருப்பினில் வீழ்ந்த புழுவானதன்றோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி வாழ்க்கையிலே
உம் நினைவு எம்மை வாட்டுகிறது
எம்
உள்ளக்கண்ணாடி உடைந்து
இரத்த வடுக்கள் பீறிடுகின்றது.
கல்விக் குருவே – உம்
இனிய பள்ளிப்பாட்டு
எம் காதில் கேட்கிறது – இல்லை
அது முகவுரை தொலைக்கப்பட்ட
மயான இறுதிப்பாட்டாக கேட்கிறது.

**2002** A/L
**வர்த்தகப்பிரிவு**
**யா/வீரசிங்கம் ம.வி.**



**எப்பொழுது ஒருவன் விஷயங்களில் பற்றற்றவக் கருமத்தில் கருத்து வைக்காது எண்ணங்களை விட்டொழிக்கிறானோ அப்பொழுதுதான் அவன் யோகாரூடன் எனப்படுகிறான்.**

**6 – 4**

**நல்லாரைக் காப்பதற்கும் கெட்டவரைக் காத்தொடுக்குவதற்கும் தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கின்றேன்.**

**4 – 8**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானம் அறியுமோ ஞாலம் உணருமோ

ஆங்கில ஆசிரியராய் அறிவை ஆற்றலை
அன்பாய் ஊட்டியதால் அகம்மிக மகிழ்ந்தோம்
ஆரம்ப அறிவைப் பெற்றவந் நாட்களிலே
ஆசையாய் காத்திருந்தோம் வாழ்நாளை

நகைக்கக் கதைகள் பலபல பேசிநிதம்
நாடக மேடைபல ஏற்றி நடித்திடவும்
நாட்கள் இனிதாக களித்தோமே அந்த
நாயகன் இன்று எங்கே? எங்கே?

கொடூரத்தில் கொடூரம் நம்நாட்டுப் போரென்று
அன்றோ அதிரவைத்த ஷெல்லின் துண்டொன்று
நெஞ்சம் புகுந்ததோ? வஞ்சகம் அறியீரே
தஞ்சம் யார் எமக்கு இந்தத் தரணியிலே

துயரின் அளவுக்கு எல்லையே இல்லை
துன்பமோ சொல்லியும் பயனே இல்லை
வானம் அறியுமோ? ஞாலம் உணருமோ?
மாணவர் நாங்கள் வழிபடும் தெய்வமதை

**க.மேனகா**
**கலைப்பிரிவு 2001**
**யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாலம் புகழும் நடிகர் திலகம்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க எம்மத்தியிற் சிறப்புடன் வாழ்ந்த அமரர் கிருஷ்ணசாமி அவர்கள். இன்று இல்லை. அகாலமரணமாகி விட்டார். அகாலமரணமென்பது ஆற்றொணாத் துன்பத்தை வரவழைப்பது. தற்காலத்தில் இதுவும் இயற்கையாகி விட்டது.

அன்னாரின் மறைவு கேட்டு அதிர்ச்சியுற்றோம். தென்மராட்சி மக்களின் இடப்பெயர்வின்போது துணிச்சலுடன் தன் கடமைகளை முடித்து தானும் வெளியேற உத்தேசித்தார். அந்த நேரத்தைத் தவறவிட்டால் அவருயிரைப் பிரித்துவிட முடியாது எனநினைத்தோ காலன் கவர்ந்துவிட்டான்.

அமரர் ஓய்வு பெற்ற தபால் அதிபராக மிசாலை வீரசிங்கம் சமூகத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியனாக உட்புகுந்தார். மாணவர் மனதை நடிப்பினால் கவர்ந்து ஆங்கிலக்கல்வியை ஆர்வத்துடன் புகுத்தினார் ஆர்வமற்றிருந்த மாணவரும் ஆசையுடன் உள்வாங்கினர்.

அடிக்கடி நிகழும் விழாக்களில் தமிழில் ஆங்கிலத்தில் எல்லாம் நாடகம் மேடைஏறும். பின்வாங்கு மேசைகளில் இடம்கொண்ட மாணவரும் மேடையில் ஏறி ஆங்கிலத்தில் பேசிநடிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் எத்தனை உருவாகின. எப்பொழுதும் மாணவர் பின்தொடர துணைவியார் துணையாக வித்தியாலய மேடைகளைகட்டி நிற்கும். போட்டி நாடகங்களுக்கு மாணவரை அழைத்துச் சென்றால் எப்பொழுதும் வெற்றியுடன் தான் திரும்பி வருவார்.

கற்றுக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற கலையார்வமும் துன்பத்திலும் சிரித்து நிற்கும் பண்பும், எப்பிரச்சினையையும் தூசாக மதித்து அணுகித்தடைகளை. உடைக்கும் சாதுரியமும், பிறருக்கு உதவிடும் பெருந்தன்மையும் அவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய உன்னத பண்புகளாகும்.

எமது கல்லூரித்தாயைப் புகழ்பூக்க முனைந்து உழைத்த அன்னாரின் பிரிவு கல்லூரிக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா உன்னத பேறுபெற்று உம்பர் பிரான் சேவடிக்கீழ் அமைதியுற அஞ்சலிக்கின்றேன்.

ஓம் சாந்தி!

**திருமதி.சி.ஜெயக்குமார்,**
**யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Words !...............Sink in tears.

Twelve months have passed after the sudden shock we had due to the untimely death of Brother Krishnasamy. He popularly Known in Meesalai as "Kiddunu Annar" whom I Know him more than fifteen years.

It is with profound sorrow that I pen these words on the death of my colleague, good friend, relation and my kind neighbourer. After his early retirement from the post of post master, he joined in the teaching carrier as a part time English teacher and served for many years at Meesalai Veerasingam M.V.

During his dedicated service in our school, he taught not only English Language but also general facts and his past own experiences which is very much needed now to lead the students as good citizens in our society.

He spent more time in preparation of special programs with students for every school functions and competitions . Because of his encouragement and firm determination, students actively participated in Drams, and other group events and won many prizes.

He was a dramatist and a good actor too. I had opportunity to act with him in two different stage play. His whole family is fond of dancing, singing and acting. His cherished wife has been teaching as a music teacher at Veerasingam M.V.

He has a dynamic personality. I have never seen him idle in and around house, there would be something for him to do or being helpful to others. He offered prayers and poojas in the small temple, which is in his house premises. Actually unbearable loss to his wife and three sons.

Veerasingam staff and students have lost a kind hearted, humble and simple gentleman. My sorrow is little more as I have lost a genuine neighbourer. But he is alive in our hearts.

**T.Thaventhiran**
**Teacher of English (sp.tr)**
**Meesalai Veerasingam M.V.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்ந்துவிட்ட பாதிரிப்பூ

அக்டோபர் ஆறாந்திகதி. ஆசிரியர் தினம், அன்று மகாவித்தியாலய மாணவர் ஆசிரியருக்கு பாராட்டு விழா எடுக்கின்றார்கள். ஆசிரியர் மேடையில் வீற்றிருக்கின்றனர். மாணவர் பாராட்டுரை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். மேடையில் அமர்ந்திருக்கும் ஆசிரியரில் சிலருக்கு திடீரென இரகசிய அழைப்பு. ஆசிரியர் சிலர் செல்கின்றனர். மாணவரின் பாராட்டுரைகள், ஆசியுரைகள் முடிகின்றன. திடீரென அதிபரின் அறிவிப்பு மாணவருக்கு, மாணவரை மகிழ்விக்க ஆசிரியர் சேர்ந்து வழங்கும் நாடகம், மாணவரிடையே மகிழ்ச்சி ஆரவாரம், மேடையில் நாடகம் அரங்கேறி முடிகின்றது. மாணவரிடையே கைதட்டல். ஆசிரியரிடையே ஆச்சரியம் காரணம் முன் ஆயத்தமின்றி மற்றவரைக் கலகலப்பூட்டும் ஒரு நாடகம் மேடையில் அதற்குக் காரணமாக இருந்தவர் திரு.கிருஷ்ணசாமி ஆசிரியர் அவர்கள். ஆம் அந்த கலகலப்பூட்டிய அந்த முகம் இன்று எம்மத்தியில் இல்லை.

தபாலதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக எம்மோடு அங்கம் வகித்தார். அந்த நாள் முதல் பாடசாலைப் பரிசில்நாள், நவராத்திரி, ஆசிரியர்தினம், ஆங்கிலதினம், தமிழ்மொழித்தினம் எல்லா நிகழ்ச்சிகளிலும் அவரின் நாடகம் முன்னணி வகிக்கும். போட்டிகளில் வெற்றியையும் தட்டிக்கொள்ளும். மும் மொழிகளும் சரளமாகத் தெரிந்தவர். தனது நாடகங்களிலும் அதனை வெளிப்படுத்தி விடுவார்.

நாடகத்தில் மாத்திரமல்ல , கவிதைத் துறையிலும் அவருக்கு நிகர் அவரே. அவரைச் சூழ ஒரு மாணவர் கூட்டம் இருந்து கொண்டு இருக்கும். அவர்களுக்கு தனது கலைத்துவத்தை புகுத்துவதில் ஆர்வமாக இருப்பார். அவருக்கு அவரின் துணைவியாரும் உறுதுணையாக நிற்பார்.

பாதிரிப்பூ தண்ணீரில் சேரும்பொழுது அந்த நீரையும் அதன் நறுமணமாக மாற்றி விடும் அதைப் போன்றவர்தான் கிருஷ்ணசாமி என்ற பாதிரிப்பூ. தன்னுடைய நறுமணமாகிய கலையினை மாணவருக்கும் தன்னைச் சேர்ந்தவருக்கும் பரப்பச் செய்துவிடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எமது ஆசிரியர் கழகத்தில் பங்குபற்றிய அந்த கடைசி நிகழ்வின் நினைவு எம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்றது. கனிஷ்ட அதிபரின் பிரிவுபசார விழா நிகழ்வு. அந்த அதிபரைப் பாராட்டி கவிதையில் வாழ்த்துரைகள் இடைக்கிடையில் எல்லோரையும் அந்தக் கவிதையூடாக சிரிக்க சிந்திக்க வைத்தார். அந்த நினைவுகள் எமது நெஞ்சை விட்டு அகலவில்லை. அதுதான் அவர் எமது கழகத்தில் பங்கு பற்றிய கடைசி நிகழ்வு

நாம் கேட்ட அவரின் கடைசிக் கவிதை

சமூக சேவைக்கு ஒரு கிருஷ்ணா
இனிமையாகப் பழக ஒரு கிருஷ்ணா
கலைமணம் பரப்ப ஒரு பாதிரிப்பூ – கிருஷ்ணா

ஆம் அந்தப் பாதிரிப்பூ இன்று உதிர்ந்து விட்டது. உதிர்ந்துவிட்ட அந்தப் பாதிரிப்பூ இறைவனின் பாதங்களில் நறுமணம் வீசட்டும்.

கிருஷ்ணசாமி ஆசிரியரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கும்



**ஆசிரியர் கழகம்**
**யா/வீரசிங்கம் ம.வி.**

ஆத்மாவுக்கு இவ்வுடலில் இளமையும் யௌவனமும், மூப்பும் உண்டாவது போல வேறு உடல் எடுப்பதும் அமைகிறது. தீரன் அதன்பொருட்டு மயங்கான்.

2–13

இவ்வாத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை. இது இல்லாதிருந்து பிறகு பிறந்ததல்ல. இது பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது. காயம் கொல்லப்படுமிடத்தும் ஆத்மா கொல்லப்படுவதில்லை.

2–20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உள்ளம் கவர்ந்த நல்லாசான்

தென்மராட்சிப் பிரதேசம் முழுமையாக அல்லோலப்பட்டுக் கொண்டிருந்த அவ்வேளையில் 09.06.2000 அன்று என் அருமை நண்பர், நல்லாசான் திருவாளர் கிருஷ்ணசாமி அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியுற்றேன் ஓடி வந்து உதவிட முடியவில்லை.

1942ம் ஆண்டில் மீசாலையில் பிறந்து வளர்ந்து சான்றோனாகி தபால் திணைக்கள அதிபராக சிறந்தசேவை மனப்பாங்குடன் பலகாலம் அரும்பணியாற்றி ஓய்வுபெற்ற பின்னர், தங்கள் சேவை எமது பிரதேச சிறார்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற உயர் எண்ணத்துடன் 1992 ஆண்டு தொடக்கம் யா /மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக 8 ஆண்டுகள் சேவையாற்றி எல்லோர் உள்ளத்தினையும் கொள்ளை கொண்டீர்.

கசப்பு மருந்தை இனிப்புடன் சேர்த்துக் கொடுப்பதுபோல ஆங்கிலக் கல்வியை தங்களுக்கே உரித்தான பாணியில் ஆடல், பாடல், நடிப்புமூலம் இனிமையாக A/L (உயர்வகுப்பு) வரையான மாணவர்களுக்குக் கொடுத்து எல்லோர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டீர்.

ஆங்கில தினப் போட்டியில் கிருஷ்ணசாமி ஆசிரியரின் நாடகம் வருகின்ற தென்றால் எல்லோரையும் ஒரு கணம் விழிக்க வைக்குமே ஆங்கிலமே தெரியாத பிள்ளைகளையெல்லாம் மேடையேற்றி ஆங்கிலத்தை பேசவைத்து வெற்றிமேல் வெற்றியை ஈட்டித்தந்த பெருமையை யாரும் மறக்க மாட்டார்கள். ஆங்கிலம் மட்டுமல்ல தமிழத் தினப்போட்டி நாடகங்களுமே அப்படித்தான். மாவட்ட மட்டத்திலும் பல வெற்றியை ஈட்டித்தந்து வித்தியாலய பெருமையை உயர்த்திய நல்லாசான் நீங்கள்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம், ஆகிய மொழிகளை சரளமாகப் பயன்படுத்தக் கூடிய வல்லமை பொருந்தியவராய் இயல், இசை, நாடகத்துறை யாவற்றிலும் பாண்டித்தியம் பெற்றவராகத் திகழ்ந்தீரே.

எமது பிரதேசத்தில் மட்டுமல்ல நண்பர்கள் எங்கிருந்தாலும் அவர்களது நிகழ்வுகளில் எல்லாம் குடும்பமாக முன்னின்று உதவுகின்ற உயர் பண்பு தங்களுக்கே உரித்தான தனிப்பண்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாக்கள் யாவற்றிலும் தாங்கள் பொறித்த முத்திரையானது இனி இங்கு நடைபெறும் விழாக்கள் யாவற்றிலும், யாவர் உள்ளங்களிலும் தங்கள் நினைவு நிச்சயமாக மீட்கப்படும். தங்களது பேரிழப்பால் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எனது சார்பிலும், எமது வித்தியாலய ஆசிரியர் குழாம் சார்பிலும், கல்விசாரா ஊழியர்கள் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து தங்கள் குடும்ப துன்பத்தினை பகிர்ந்து கொண்டு தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**கு.சிவானந்தம் (அதிபர்)**
**யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி.**

## கவிதாஞ்சலி

**மூத்தவர் நாம் நாட்டில் கொடூரமென்று**
**இத்தனை நாள் காத்திருந்தோம் இங்கே**
**எட்டுணையும் மாறவில்லை இன்னும் இன்னும்**
**பட்டதுயர் நாடுபல கூறும் சுற்றம்**

**எத்தனையோ கற்பனைகள் எண்ணி எண்ணி**
**சித்தமெலாம் களி கொண்டோமே அன்று**
**முத்திரையாய் பதித்து விட்டீர் உம்மை உங்கே**
**சித்திரமாய் நாம் கண்ட கனவுகள்**


**மெத்தமனம் வேகுதப்பா சத்தமெலாம் அடங்கி**
**சுத்தமாய் அமைதி வரவே வருவோம்**
**புத்திரர் நாம் போட்டதெல்லாம் போச்சுதப்பா**
**எத்தினமும் காணவென்று துடியாய் துடிக்கின்றோம்.**


**மகன், மருமகள்**
**திலீபன், பிரேமினி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவே

அன்று காலையும் வழமை போல் மலர்ந்தது
என்றும் போல் அழகுடன் இளம்காலை
எமக்கு மட்டும் ஒன்பது மணியுடன்.........
அட்டமியோ, வெள்ளியோ... ஏன்
அட்டமியிலே ஷெல் வராதோ எனக்கேட்ட
அப்பா.......
ஷெல்லால் சிரித்திட்டார்
செங்குருதியில் தெப்பமானார்
அங்கு சென்ற அம்மா கூக்குரலிட
அயலார் தொடர நான் விரைய....
அய்யய்யோ வேண்டாமே இவ்வுலகு
வேணுமோ நமக்கிந்த இடப்பெயர்வு
சொந்த மண்ணின் சுகமிழந்து!
சொந்த பந்தம் தான் பிரிந்து
அகதியென அந்தஸ்தும்.....
அட்டைக்கு நிவாரணமும்
வீட்டுக்கு அலைந்து வீதியோரம் தானிருக்க
வீணாக உயிர்போக விரும்பாது
போய் விட்டார் அப்பா.................
அரைமணியாவது கூடியழலாமா
ஆரும்தான் ஓடி வருவாரா
கோரச் "ஷெல்" வீச்சோ
கொட்டும் "மல்ரி பெரலோ"
என்னதான் செய்வோமோ
எங்குதான் செல்வோமோ
ஒன்றுமறியாது! உணர்வுகள் மரத்துநிற்க
அன்று கூடி நின்ற மக்களவர் உம்மை
கரத்தை வண்டியிலே கொண்டிழுக்க
கடக்கும் வீதியிலும் ஷெல்கள் வீழ்ந்திட
உம் வண்டிலின் கீழ் கிடந்துருண்டு
ஓரோட்டமாய் உம்மை இழுத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நொடியில் சேர்த்து வைத்தார்.
பாரினில் நீர போஸ்மாஸ்டர்
பள்ளியிலே நல்லாசிரியர்
ரெலிபோன் ரெலிபோன் என்று
கலிகாலத்து வாழ்வு போல் வந்த
''ரெலிபோன்'' தொடர்பகமும்
ஆசையாய் அகத்திமுதல்
அனைத்து பயிரும் வைத்து
நல்ல தோட்டங்களும் வயலும்
காடேகினும் ஏடது கைவிடாமல்
கொம்பியூட்டர் கோசும்
நல்ல நாடகமும் அரங்கியலும்
பல்துறை பாண்டித்தியமும்
பால பண்டிதராயும் — இப்படியே
மேதினியில் வாழ்ந்திறுதியில்
இப்படியா போய் முடிந்தீர்
சொத்திற்கும் சுகத்திற்கும் ஆசைகொண்டு
சொர்க்கத்திற்கு செல்லவில்லை
செங்குருதி தோய நீர்
சொந்த மண்ணிலேயே......
செந்தமிழ் மண்ணிற்காகவே
சிந்தினீர உம் செந்துளிகளை
உமது செந்நீரத்துளி ஒவ்வொன்றும்
உன்னதமானவை, உணர்வுள்ளவை
சிலருக்கு மட்டுமே தெரியும் — உம்
சீரிய பணியை.....
காலம் வரும் காத்திருப்போம்
அதுவரை......
உம் பணி தொடர்வோம்
இறுதி வரை.........



**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரின் கவிதைத் தொகுப்பில் இருந்து.....


நாவல் மரத்தடியில்
நலங்காமற் தீபமொன்று
ஓங்கி எரிகின்றது!
தீபக்கால் பாதத்தில் – காய்த்த சருகொன்றில்
கணக்காக நாலுமலர்
தேசத்திற்காய் அவன் தேகத்தை விட்டு....
கணக்காக நாலு நாள்
தன்னைத் தொலைப்பாரென்று!
தன்னையே தொலைத்திட்டான்
தொலைந்த பிணத்திற்கு
துவாரமிட்டார் ஆயிரம்பேர்
"ஒன்ன பலப்பான்" என்று
எக்காளமிட்டார்கள்
எட்டிப் பார்த்த ஆச்சி
எங்கள் குமாரா – நீ
சாகும் வயதோடா?
சங்காரம் ஏன் செய்தார்
முப்பதிற்குள் நீயும்
சருகாயின்னயோ ஐயாவே
சாவே – உனக்கு
இத்தனையும் இரக்கமன்றோ....
தொதல் ஆசை என்று – அன்று
ஆவலாய் தர உண்டாய்
அரற்றி அரற்றி அழலுற்றார்
"கண்ணுக்குள் நிலவென்ற"
கண்ணார நீ பார்த்தாய்
விண்ணுக்கு நீ – இவ்விரைவாய் ஏன்
ஏகினாய் வேலையுண்டோ அங்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை வல்லோனே

"வீரகேசரியில் முதல்முதல் உம் கவிதையைப் படித்தேன்
அப்போது கவிதையின் தரம் அறியும் வயது எனக்கில்லை
பன்னிரண்டு கூட ஆகாத பருவம் அது ஆனாலும்
வன்னியின் செல்வன் என்ற புனை பெயரில் வந்த அந்த
நிலவு பற்றிய கவிதையைத் தொடர்ந்து மேலும்
பற்பல வந்தமையை இன்று நினைக்கிறேன்
தமிழின் இனிமையும் இலக்கிய வேட்கையும்
இணைந்த கவிதைகள் ஏராளம் ஏராளம்
பொல்லாதவற்றைப் புரியக் கூறும்போது
நல்லாரால் எனவும் நாமம் பூண்டீரே
எல்லாம் தெரிந்தும் யான் சொல்லாமல் விட்டேனேல்
பொல்லாதவனாகி விடுவேன் இப்புவியிலே

என் சிந்தையிலும் செந்தமிழ் மணக்க வைத்தவனே
உன் ஊக்கத்தால் தமிழ் பாடினேன் என்றால் பொய்யேயில்லை
நின், வழிகாட்டலிலே தான் பல வடிவங்கள் சமைத்தேன்
என்றால், வியப்பேயில்லை உயிர் நீயானாய் ஆதலால்
அன்பனே
"ஊரெல்லாம் உன்பாட்டுத்தான் என் உள்ளத்தை" மீட்டும்
பாரெல்லாம் என் கரத்தால் பாடல்கள் பிறக்கும்
நாரெல்லாம் மாலையுடன் மணக்கும் நினைக்கும்
பேரெல்லாம் "கிட்டு" உமைக் காண வைப்போன்".



## இசைப் பிரியனே.........

"தாமரை பூத்த தடாகமடி" என ஜோராகப் பாடுவீர்கள்.
களை சொட்டும் அப்பாடல் மட்டுமா? சினிமாப் பாடல்களில்
ஆழ்ந்த கருத்துடையவை. அவற்றில் பாமழையே வந்து கொட்டுமே
தமிழ் மட்டுமென்ன ஹிந்தியிலும் சிங்களத்திலும் கூட
வற்றாத அலையாய் அள்ளி அள்ளி வீசுவீரகளே
இசையின் பிரியத்தினாலே மிருதங்கம் வாங்கி
சிலநாள் கற்றபின் மாற்றலாகிச் சென்றதனால்
மிருதங்கம் தொடர்ந்து படிக்க முடியாமல் போனது
அதனால் மிருதங்கம் அப்படிப் போனதே
என்று அடிக்கடி சொல்லுவீரகள்.
புதிதாக வந்த ஒலிநாடாப் பாடல்களைப் பதித்து
ஆவலாய் போட்டுக் கேட்பீரகள்
பழுத்த பழம் பாடுகுது பார் என்று இரசிப்பீரகள்
நான் இசை நாடகம் நாட்டிய நாடகம் எதையும்
எழுதியவுடனே பாடியோ பேசியோ காட்டுவேன்
எல்லாம் கேட்டபின்பு இந்த இடத்தில் இப்படி வரக்கூடாதா
இப்படி வந்தால் நல்லாயிருக்குமே என்றெல்லாம் கேட்பீரகள்
என்னருகில் இருந்து சேர்ந்தும் தனித்தும்
எத்தனை நாட்டிய நாடகத்திற்காக குரல் கொடுத்திருக்கிறீரகள்
உங்கள் ஆவலை எம் பிரயாண நேரங்களில்
ஓடுகின்ற CHARLY யில் பின்னிருந்தே பாடுவேன்
அப்போது தான் பாடங்கற்றிட உங்களுக்கோ நேரம் இல்லை
எனக்கோ நேரம் இருக்கும்
கோயிலில் திருவாசக முற்றோதல்களில் பங்குகொள்ளுவோம்
குயில் பத்து வருகின்ற போது "தேஷ்" இராகம் வந்தாகவேண்டும்
"தேஷ்" சரிதானா என்று பலமுறை கேட்டுவிடுவீரகள்
அப்படி ஒரு தனிப்பித்து அந்தத் தேஷில் ஹிந்தோளம், ஜமன்கல்யாணி,
சிந்துபைரவி என்று சொல்லுமளவிற்கு அறிவும் ஆர்வமும் திறமையும்
கண்டேனே.
திருவிழாக்களில் பஜனை செய்வோமே
அந்தந்த தலங்களில் கடவுளரையே பாடுவது பொருத்தம் என்பேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் எல்லாம் ஒன்றுதானே, கங்காணி முருகனையும்
சங்கத்தானை மீனாக்ஷியையும் பாடுவோமா
பலமுறை இரகசியமாகக் கேட்கும் வேண்டுகோள் இது
பாடல்களைத் தொடக்கி விட்டால் குரல் ஓங்கி ஒலிக்கும்
எப்பொழுதுமே உத்வேகமாக இரண்டு பாடலையும் பாடுவீரகள்,
பொற்சுண்ணம் பாடும் தருணங்கள் பக்கத்திலிருப்பேன்
பொருளுணர்ந்து பாடவேண்டும் என்ற
என்விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்
பைரவி, முகாரி, என்று பின் சிவரஞ்சினியை விரும்புவேன்
அது எனக்கே சொந்தமாகி விட்டதா?
மெல்லிசையில்......................
" நெஞ்சுக்குள்ளே பிறந்து நித்தமுமே வளர்ந்து
பந்தமுமாய் மிகு பாசமுமாய் இடம்
கொண்ட தென்ன குயிலே..........

ஆயிரம் காலம் ஆனதோ அதில்
ஆனந்தம் நாளும் சேர்ந்ததோ
மாலையின் வாசனை மீறியே வீசினால்
மாற்ற மென்ன குயிலே – இதில்
மாற்றமென்ன குயிலே
நீலவானம் விரிந்தது நீண்ட வெளியும் சேர்ந்தது
ஞாலத்தில் மழையும் வீழும் போது முழக்கமன்றோ குயிலே
இடி முழக்கமன்றோ குயிலே
தென்றல் வந்து வீசும் போதில் ஏதேதோ இராகங்கள் பேசும்
தேசம் எங்கும் வீசும் போது புயலாகவே சுழற்றிவீசும் அது
யாவையும் சுழற்றி வீசும்
காலங்கள் ஏதோ மாறும் கவலைகள் யாவும் தீரும்
தாளத்துக் கேற்ப ஆடிடும் போது தானாகவே சுகம் தோன்றும்
அங்கு
தானகவே சுகம் தோன்றும்
இந்தப் பாடலை நான் யாத்து பாடிக்காட்டியதிலிருந்து
அடிக்கடி சேர்ந்து பாடுவோம் என்பீரகளே...........
இசைப்பிரியனே..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பட்டாள் நங்கை ..........

எனும் இசைநாடகத்தில்....... அமரர்



வேண்டாமடி மகளே - அந்த வேல் முருகன்

திருமால் மருகன் சம்பந்தம்.......


ஆண்டியாய் சுடலையில் ஆடுவோன் மகனாம்

அவனுமே ஆண்டியாம் ஆசை கொள்ளாதே .......

# சன்னிதியில் முருகா

தொண்டமனாற்றங் கரைதனிலே வந்து நின்றாடும் திருமுருகா
தொண்டனிட்டே நான் தொழுதேன் அந்தத் தேதியை நீசொல்லு
நண்டுகள் றால்கள் மீன்கள் இவை கரைவந்தாடித் திருமுருகா
பண்டை வினையேன் வந்தே தொழுதேன் அந்தச் சேதியை நீ சொல்லு
சங்குகள், சிப்பிகள் சோகிகள் சப்தஜாலங்கள் செய்திட முருகா
பொங்கி வரும் உணர்வால் உன்னைப் போற்றித் துதித்திருப்பேனே
தென்னை மரங்கள் ஆடும் அந்தத் தென்றலில் நீ வந்து பாடும்
பண் எது என நீ சொல்லு அதைப் பாடி நான் உன்னடிசேர
காலங்கள் கோலங்கள் மாறும் அந்தக் காட்சியிலே எந்தநாளும்
தாளங்களிலே நீ ஆடும் தனித் தாண்டவம் அறியார் முருகா.

ஏழைகள், கூலிகள், நோயாளர் என எத்தனை பேர்களைப் படைத்தாய்
ஏதேதோ கவலையால் மாந்தர் என்றும் உன்னிடம் வருகிறார் முருகா
தேவர்க்கும் அன்று சேனாதிபதியாய் சேனையை நடத்தி நின்றாயே
சூரன் அவன் உடல் சேவல் மரமுமாய் ஆகிட அருள் செய்தாய் முருகா
காலம் காலமாய் தமிழன் மண்ணிலே சண்டைகள் நீ அறியாயோ
அலங்கோலம் பண்ணுறார் அத்தனை கொடூரமும் ஆண்டவன் நீ அறியாயோ
ஊரை விட்டுமே உறவுகள் பிரிய ஓடிநாம் வந்தோமே
போரை நிறுத்தி நீ முடிக்க மறுப்பியேல் பல பேர்கள் துடிப்பாரே
நோயை நீக்குவாய் கவலை போக்குவாய் நொடிப்பொழுதில் துணைப்பாய்
தாயைப் போல நீ தயவுடன் வந்து சஞ்சலம் நீக்கிடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீசாலை இலந்தைக்கூடல் கங்காணியார்

சுப்ரமண்யா சிவ சுப்ரமண்யா சிவ சுப்ரமண்யா குமாரா – சிவ
சுப்ரமண்யா சிவ சுப்ரமண்யா சிவ சுப்ரமண்யா குகனே....
சூரசங்காரா வடிவேலா சுப்ர மண்யா சிவசுதனே
சூழ்கலி நீங்கத் துணை புரிவாய் (சிவசுப்ர)
சங்கரபாலா சரவணனே சமரினில் தேவரை மீட்டவனே
சமய மீதோடி வந்திடுவாய்
கலியுகவரதா குருபரனே கார்த்திகேயா கடம்போனே
கழல் தொழுதோம் எமைக் காத்தருள்வாய் (சிவசுப்ர)
செந்தூர்க் குமரா சேயோனே சேவற் கொடியோய் மயிலோனே
சேர்ந்துனைத் துதித்தோம் வந்தருள்வாய் (சிவசுப்ர)
ஆறுபடை வீடுடை அழகோனே ஆவினன் குடிதனில் அமர்வோனே
ஆறுதல் அளித்தெமை ஆண்டருள்வாய் (சிவசுப்ர)
குன்றிலாடும் குமரேசா குறமகள் நேசா குகனேயா
குறைகளைத் தீர்த்தருள் புரிந்திடுவாய் (சிவசுப்ர)
பழமுதிர் சோலைப் பழம் நீயே பரமனின் மகனே மயிலோனே
பாதம் பணிந்தோம் அருள் பொழிந்திடுவாய் (சிவசுப்ர)
நல்லூர்க் குமரா நாயகனே நாரணன் மருகா நறுந்தேனே
நானிலம் வாழ வழி செய்குவாய் (சிவசுப்ர)
சந்நிதி முருகா சற்குணனே சரவணபவனே அறுமுகனே
சற்குருவே வந்திடுவாய் (சிவசுப்ர)
கதிர்காம வேலா இளவமுதே காட்சிநீ மாணிக்க கங்கையனே
கண்டுளம் நிறைந்திடத் தோன்றிடுவாய் (சிவசுப்ர)
கருணைக்கடலே கங்காணி முருகா கஜமுக சோதர வள்ளி மணாளா
கடிது நீ வந்தெம்மைக் காத்தருள்வாய் (சிவசுப்ரமண்யா)

(அமரர் விரும்பும் பஜனைப்பாடலில் ஒன்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

தாரணியிலே வந்து பிறந்தார் எவரும் தரித்து நிற்பதில்லை
காரணம் தெரிந்தும் புரிந்தும் புரியாதாராய் நடக்கின்றோம்
மாரணம் ஒருநாள் வருமென்றிருந்தும் மதிகெட்ட மனத்தராய் (மனிதராய்) நாம்
பூரணம் இல்லாப் பொருள்களுக்காய் என்றும் அலைகின்றோமே

படைத்தோமா இல்லை அளந்து கொடுத்தோமோ அல்லை
அழுக்கைத் துடைத்தோமோ அன்றி அவனை அடுத்தோமோ
எடுத்தோமோ எவர்க்கும் எதற்கும் எங்கும்
விடுத்தோமோ ஓலை மேலொன்றும் அறியோம் நாம்


படைத்தவன் எடுக்கின்றான் பங்கு எமக்கில்லை
உடைத்தவன் சிரிக்கின்றான் உறவு எமக்கில்லை
துடைத்தவன் போகின்றான் அறிவு எமக்கில்லை
கடைத்தவன் ஆயிருந்தால் கவலை எமக்கில்லை

தென்புலத்தார் தெய்வம் என்றே கருதி
துன்பறுப்போம் தூய ஆத்மா சாந்தி
என்பலத்தால் உம்பலத்தால் யாவரும் வேண்டி
அன்புடைத்தோன் தெய்வநாயகனை நண்ணி நிற்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்.
**"இதுவே உலக நியதியும்,**
**எனது படைப்பின் சாராம்சமாகும்"**

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றி

எவருமே எதையும் எண்ண முடியாத
வேளையில் 2000.06.09 அன்று எம் குடும்பத் தலை
வரை இழந்து தவித்தபோது உடன்பிறந்தார் போல் கடும்
எறிகணையினையோ கொட்டும் மல்ரி பெரலையோ பொருட்
படுத்தாது தலைவரின் பூதவுடலின் இறுதிக்கிரியை செய்ய
உதவிய யாவருக்கும், நெல்லியடியில் இட ம்பெயர உதவிய
தோடு தங்குவதற்கு ஒழுங்குகளைச் செய்தோருக்கும் தம்
இல்லத்தினைத் தந்துதவிய திரு.சு.ஜெயராஜா குடும்பத்தினருக்கும்,
சபிண்டீகரண அந்தியேஷ்டிக் கிரியைகளைச் செய்துதவிய குரு
மார்களுக்கும், உடுப்பிட்டியில் புகலிடம் அளித்து உதவும் திரு.திருப்
பரங்கிரிநாதன் குடும்பத்தவருக்கும் தம்முடன் எம்மையும் இணைத்து
வேண்டிய உதவி புரிந்தவரும் எம்மினிய உறவினர்களுக்கும் இன்றைய
ஆத்ம சாந்தி நிகழ்வினைச் செய்து உதவிடும் சிவாச்சாரியாருக்கும்
நாம் துயருற்ற வேளை இடம்பெயர்வைக் கருதாது ஓடோடி வந்து
ஆறுதல் மொழி பகிர்ந்தோர், துன்பத்தில் பங்கெடுத்தோர், கடிதம்
மூலமும், தொலைபேசி மூலமும், தந்தி மூலமும், கண்ணீர் அஞ்சலி
மூலமும் அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் இன்று
இவ்வைபவத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் இந்நூலை
ஆக்க உதவிய யாவருக்கும் அச்சகத்தோருக்கும் நெஞ்
சகலா நன்றியை நவின்று நிற்கின்றோம்.

"அயோத்தி குடும்பத்தினர்"



பிள்ளையார் அச்சகம், 676, நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org